# SRCAS PULSE

An IQAC Initiative

15th August, 2022




SRCASofficial

www.srcas.ac.in

# நம் கல்லூரியில் சுதந்திர தினவிழா கொண்டாட்டம் கோலாகலம்



நம் கல்லூரியில், சுதந்திர தினவிழா இன்று (15.08.2022) கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு நம் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார்.

கோயம்புத்தூர் தேசிய மாணவர் படை தலைமையிடப் பயிற்சி அலுவலர் லெப்டினன்ட் கர்னல் தினேஷ்குமார் பத்தக், விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தேசியக் கொடியேற்றி வைத்தார். விழாவின் சிறப்பு நிகழ்வாக நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் அணிவகுப்பைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் சிறந்து விளங்கிய தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.








முன்னதாக பாப்பநாயக்கன்பாளையம் மணி மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள காந்தி மண்டபத்தில் இருந்து, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் எஸ்.பிரகதீஸ்வரன் தலைமையில், நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள், தேசியக் கொடியை ஏந்தியவாறு, கல்லூரி வளாகம் வரை ஊர்வலமாக வந்தனர். அப்போது பொதுமக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். சுதந்திர தினவிழாவில் கல்லூரி துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# Glimpses of Independence Day Celebrations


















# Glimpses of Independence Day Celebrations













# Glimpses of Independence Day Celebrations
























# Glimpses of Independence Day Celebrations






# Glimpses of Independence Day Celebrations












# Glimpses of Independence Day Celebrations









# NSS - Special Award - Bharathiar University

## 15th August 2022

**NSS Programme Officers Dr.S.Prahadeeshwaran, Mr.R.Nagarajan and Ms.A.Subhasheni received special award from VC of Bharathiar University today (15-08-2022).**









# NSS - Appreciation - ABLEity 2022

## 14th August 2022

**Nithiliyam trust (NISSARC) & Rotary Coimbatore galaxy Organized ABLEity 2022 on 14.08.2022. The National Service Scheme volunteers of our college received appreciation from Dr.G.S.Sameeran IAS, Coimbatore District collector for volunteer support for the programme.**






# NSS - Best Volunteer Support Award - Tamilnadu Govt Health Department

## 12th August 2022




NSS SRCAS WING Received Best Volunteer Support Award from Tamilnadu Govt Health Department in association with No Food Waste NGO.

INDIA

13 SRCAS NSS volunteer received Best Volunteer Award for Eat Right Walkathon 2022 organised by Tamilnadu Health Department in association with No Food Waste NGO.



# Student Activity

## Rotaract Club - Event "8 Square"

**13th August 2022**




The Rotaract club of Sri Ramakrishna college of arts and science have done and dusted an event "8 Square" ~ Make your move forward a chess tournament for school students, Which consist of 3 categories ranging from Grade 3 to 12 held at Sai Vidhya Nikethan Matric Hr Sec School, Mathamapalayam on 13.08.2022.

Mr.P.K .John -Inspector of Police ( Special Task Force - Athikadavu) was the chief guest who addressed the gathering about the usage of mobile phones and how the young minds can be nourished.

Special Invitee Mrs.S.Ragajeevitha -Principal of Sai Vidhya Niketan Matric Higher Secondary School who supported and encouraged the participants with her beautiful words.

From Rotaract District 3201 Rtr. IPP. Sabarinathan District Director of International Service, Rtr. PP. Vijay Vignesh GRR Group-2 & Rtr. PP. Abijeeth GRS Group-3 took part and supports the host team for the success of the event.














There were 150+ participants from various schools around coimbatore had participated and top 10 winners of each categories were awarded with trophies, medals and certificates. In addition, Rotaract Club of Sri Ramakrishna College of Arts and Science had donated 150+ tree saplings for the participants and to the schools with the theme to create best friend on earth of man is the tree.

On account of 75th Independence day, flags were provided for all the participants and to celebrate commonality ever participants pinned the Indian flags to their counter participants.

The most cutest relationship which hides the love with fight is revealed by tieing rakhi. The sweet love of sisters show cased by tieing rakhi to their lovely brothers of District council members and board members.





# Student Zone

## வண்ணத்துரிகை





**Yogesh Kumar R**
**(21209120) - II MBA**







**Aswinkumar K**
**I BBA Shift 2**

# வண்ணத்துரிகை





**Atchaya A**
(20116008)
III B.A English Literature



## "I do"... Photography





**Samreetha M**
(21106104)
II B.Sc CS Shift 2

# 1906 முதல் 1947 வரை தேசியக்கொடி அடைந்த மாற்றங்கள்..! கடந்து வந்த பாதை



தேசியக்கொடியை வடிவமைத்த பெருமை மசூலிப்பட்டினத்தைச் சேர்ந்த பிங்காலி வெங்கையாவையே சேரும்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நாடு முழுவதும் இல்லந்தோறும் மூவர்ணக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. சமீப காலத்தில் சுரையா தியாப்ஜி என்பவர் தான் தேசியக்கொடியை வடிவமைத்ததாக ஒரு செய்தி பரவலாக உலா வருகிறது. அதனை மறுத்து, தேசிய கொடியை வடிவமைத்த பெருமை மசூலிப்பட்டினத்தைச் சேர்ந்த பிங்காலி வெங்கையாவையே சேரும் என்பதை சான்றுகளுடன் நிரூபித்துள்ளனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

நம் நாட்டின் தேசியக்கொடி கடந்து வந்த பாதையை இப்போது காணலாம். 1906 ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது வரை, நமது மூவர்ணக் கொடி பல்வேறு நிறத்தையும் வடிவத்தையும் கொண்டு அமைக்கப்பட்டது. இந்த நிலையில் சையத் பிர்தவ்ஸ் அஷ்ரப் என்பவர் நமது தேசியக்கொடியின் நீண்ட வரலாற்று தகவல்களை பகிர்ந்துள்ளார். அதன்படி முதன் முதலாக ஆகஸ்ட் 7, 1906இல் நம் நாட்டில் முதல் தேசியக் கொடி பறக்க விடப்பட்டது. கொல்கத்தாவில் உள்ள பர்சி பாகன் சதுக்கத்தில் நாட்டின் முதல் தேசியக் கொடி 1906 ஆம் ஆண்டு ஏற்றப்பட்டது.

அந்த கொடியில் சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை என மூன்று நிறங்களில் கிடைமட்டமாக கோடுகள் வரையப்பட்டிருந்தன. மூவர்ண கொடியின் மையத்தில் தேவநாகரி மொழியில் வந்தே மாதரம் என பொறிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 22, 1907இல் இரண்டாவது முறையாக புதிய வடிவத்தில் இந்திய தேசிய கொடி ஏற்றப்பட்டது. ஆனால் இம்முறை இந்தியாவில் அல்ல. ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சோசியலிச கூட்டத்தில் இந்திய தேசிய கொடி ஏற்றப்பட்டது. இந்த நிகழ்வின் மூலம், அந்நிய நாட்டில் முதன் முறையாக இந்திய கொடி ஏற்றப்பட்ட வரலாறு படைக்கப்பட்டது. இந்த மாபெரும் சாதனைக்கு சொந்தக்காரர் மேடம் பிகாய்ஜி காமா என்று அழைக்கப்படும் பெண்மணி ஆவார்.




Unofficial flag of India in 1906



The Berlin committee flag, first raised by Bhikaiji Cama in 1907

மூன்றாவது முறையாக மாறுபட்ட வடிவத்தில், டாக்டர் அன்னி பெசண்ட் மற்றும் பால கங்காதர் திலகர் இணைந்து 1917இல் நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்ட சிவப்பு மற்றும் பச்சை நிறத்திலான கொடியை வடிவமைத்தனர்.


நான்காவது முறையாக 1921 ஆம் ஆண்டு, சக்கர ராட்டினத்துடன் அமைக்கப்பட்ட இந்திய கொடி ஏற்றப்பட்டது. இந்த கொடியின் மையத்தில் சக்கரமும் வெள்ளை, பச்சை, சிவப்பு என மூன்று வண்ணத்திலும் கொடி அமைக்கப்பட்டது. இந்த வடிவத்தை கண்ட அண்ணல் காந்தியடிகள், இதே



The flag used during the Home Rule movement in 1917



The flag unofficially adopted in 1921




வடிவத்தை சற்று மாற்றியமைத்து, இந்திய தேசியக் கொடியாக உருவாக்கலாம் என்று எண்ணினார்.

தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 முதல், இந்திய கொடியின் மையத்திலிருந்து சக்கர ராட்டினத்தை மறுசீரமைத்து அசோக சக்கரமாக நிறுவி, இப்போது நாம் பயன்படுத்தும் மூவர்ணக்கொடி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. அது சரி, காங்கிரஸ் கட்சியின் சின்னமாக கருதப்பட்ட நெசவு சக்கரத்தை கொடியின் மையத்திலிருந்து தூக்கிவிட்டு, அசோக சக்கரத்தை கொண்டு வந்தது ஏன் தெரியுமா?

சுதந்திர போராட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சி தலைவர்கள் பண்டிட் ஜவஹர்லால் நேரு, தேசியக்கொடி கமிட்டியை டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் உருவாக்கினார். அந்த குழு தீவிர ஆலோசனையில் இறங்கியது. இந்த யோசனை, காந்தியடிகளுக்கு சரியானதாக படவில்லை.

நாட்டுக்காக அரும்பாடுபட்டு சுதந்திரம் பெற்று தந்த காங்கிரஸ் இயக்கத்தின் சின்னம் தேசியக்கொடியாக இருந்தால் என்ன? என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது. அவர் தனது ஆலோசனையை அந்த கமிட்டிக்கு வழங்கினார். அதன்படி மையத்தில் இருக்கும் அசோக சக்கரத்தை பார்க்கும்போது உலகமெங்கும் அமைதியை விரும்பிய பேரரசர் அசோக சக்ரவர்த்தியை நினைவில் கொள்ளலாம். அவர் அனைத்து மதத்தினரும் சமமாக ஏற்றவர் என்று காந்தியடிகள் கூறினார்.

இந்நிலையில், நமது தேசியக் கொடியை வடிவமைத்தவர் சுரையா பத்ருதீன் தியாப்ஜியே தவிர பிங்காலி வெங்கையா அல்ல, சுரையா தியாப்ஜி என்பவர் தான் தேசியக்கொடியை வடிவமைத்ததாக ஒரு செய்தி பரவலாக உலா வருகிறது. நாடாளுமன்றத்தின் வரலாற்று காப்பகங்களைச் சென்று பார்த்த பிறகு, கொடி வழங்கும் குழுவின் உறுப்பினர்கள் பட்டியலில் சுரையா தியாப்ஜி இருந்ததை உறுதி செய்யப்பட்டாலும், தேசிய கொடியை வடிவமைத்த பெருமை மசூலிப்பட்டினத்தைச் சேர்ந்த பிங்காலி வெங்கையாவையே சேரும் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

Courtesy: https://www.dailythanthi.com/News/Sirappukatturaigal/the-tiranga-from-1906-to-1947-768393

# இந்திய சுதந்திரம் 75



இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் சுரையா தியாப்ஜி.

1. ஒரு மனிதனுக்குச் சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ அதே போல ஒரு நாட்டுக்கும் சுதந்திரம் முக்கியம். உலகின் மிகப் பெரிய ஜனநாயகக் குடியரசான இந்தியாவில்தான் நாம் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், உங்கள் தாத்தா, பாட்டிகள், அவர்களுடைய பெற்றோர் எல்லாம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

2. வளம் மிக்க இந்தியாவை நாடி போர்த்துக்கீசியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஐரோப்பியர்கள் வந்து கொண்டிருந்தார்கள். பிரிட்டனைச் சேர்ந்த கிழக்கிந்திய நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ராபர்ட் க்ளைவ் படை, 1757ஆம் ஆண்டு பிளாசிப் போரில் வங்காள நவாப்பைத் தோற்கடித்தது. இதன் மூலம் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி காலூன்றியது. கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவின் பிற பகுதிகளையும் தங்களின் ஆட்சிக்குள் கொண்டு வந்தது.

3. 1780ஆம் ஆண்டு கிழக்கிந்திய நிறுவனத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார் சிவகங்கை ராணி வேலுநாச்சியார். இவரே இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீராங்கனை. இவருக்குத் திப்புசுல்தானின் தந்தை ஹைதர் அலி, படைகளைக் கொடுத்து உதவினார்.

4. இந்தியாவின் பிற பகுதி மன்னர்களைப் போல அல்லாமல், ஆங்கில அரசாங்கத்துக்கு அச்சத்தை ஏற்படுத்தினார் மைசூரை ஆண்ட திப்புசுல்தான். இவரின் சொந்த ஏவுகணை தொழில்நுட்பத்தைக் கண்டு ஆங்கிலேயரே ஆச்சரியப்பட்டனர். போரில் கொல்லப்பட்டாலும் திப்புசுல்தான் ஏற்றி வைத்த 'சுதந்திரத் தீ' இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

5. 1806ஆம் ஆண்டு இந்தியப் படைகள் ஐரோப்பிய உடைகளை அணிய வேண்டும், மத அடையாளங்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஆங்கிலேயரிடமிருந்து உத்தரவு வந்தது. இதை எதிர்த்து வேலூர்க் கோட்டையில் சிப்பாய் கலகம் வெடித்தது. இதுவே பின்னால் வந்த சிப்பாய் புரட்சிக்கு முன்னோடி.

6. தீரன் சின்னமலை, வீரபாண்டிய கட்டபொம்மன், கர்நாடகத்தின் கிட்டூர் சென்னம்மா போன்றவர்கள் ஆங்கிலேயப் படைகளைத் துணிச்சலாக எதிர்த்தனர்.

7. 1857... துப்பாக்கிக் குண்டுகளில் பசு, பன்றியின் கொழுப்பு தடவப்பட்டதாக வதந்தி கிளம்பியது. இதை எதிர்த்து சிப்பாய்கள் கலகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தன. ஆங்கிலேயர்கள் இரும்புக்கரம் கொண்டு போராட்டக்காரர்களை அடக்கினர்.

8. 1858ஆம் ஆண்டு குவாலியரில் நடைபெற்ற போரில் ஜான்சியின் ராணி லஷ்மிபாய் கொல்லப்பட்டார்.

9. இதுவரை கிழக்கிந்திய நிறுவனம் மூலம் ஆட்சி செய்துகொண்டிருந்த ஆங்கிலேய அரசாங்கம், நேரடியான ஆட்சிக்குக் கீழ் இந்தியாவைக் கொண்டுவந்தது. 1877ஆம் ஆண்டு விக்டோரியா ராணி இந்தியாவின் மகாராணியானார்.

10. பால கங்காதர திலகரின் 'சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை' என்கிற கோஷம் நாடு முழுவதும் பரவியது.

11. விவேகானந்தர், லாலா லஜபதி ராய், பிபின் சந்திரபால், வ.உ.சிதம்பரனார், பாரதியார், அரவிந்தர், சுப்பிரமணிய சிவா, பக்கிம் சந்திர சட்டர்ஜி, ரவீந்திரநாத் தாகூர், தாதாபாஜ் நவ்ரோஜி போன்றவர்களின் பேச்சும் எழுத்தும் செயலும் மக்களிடம் சுதந்திர உணர்வை ஊட்டின.

12. 1905ஆம் ஆண்டு வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இது மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்துக்கும் வழிவகுத்தது.

13. தென்னாப்பிரிக்காவில் நிறவெறி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராக இருந்த காந்தி, இந்தியாவுக்கு வந்தார். கோபால கிருஷ்ண கோகலே, ரவீந்திரநாத் தாகூர் போன்றோரைச் சந்தித்தார். இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினார். 'சத்தியாகிரகம்' என்கிற வன்முறைகளற்ற போராட்ட வடிவத்தை

உருவாக்கினார்.
14. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படுபவர்களை விசாரணை இன்றி, இரண்டு ஆண்டுகள் வரை சிறையிலடைக்கும் ‘ரௌலட் சட்டம்’ கொண்டு வரப்பட்டது.
15. அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க எதிர்ப்புப் போராட்டங்களும் வலுப்பெற்றன. 1919ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் திடலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். ஆங்கிலேய ராணுவ ஜெனரல் ரெஜினால்ட் டையர் முன்னறிவிப்பு இன்றி, மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நிகழ்த்த உத்தரவிட்டார். நூற்றுக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். இந்தப் படுகொலை நாட்டையே உலுக்கியது. போராட்டங்கள் தீவிரமடைந்தன.
16. 1929ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் நாடு முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக ‘ஒத்துழையாமை’ இயக்கத்தை ஆரம்பித்தது. ஆங்கிலேயக் கல்வி நிறுவனங்களையும் நீதிமன்றகளையும் புறக்கணித்தல், அரசு வேலைகளை ராஜினாமா செய்தல், வரி செலுத்த மறுத்தல், ஆங்கிலேயர்களின் கௌரவப் பட்டங்களைத் துறத்தல் போன்றவை செயல்படுத்தப்பட்டன.
17. 1930ஆம் ஆண்டு உப்புக்கு வரி விதித்தது ஆங்கிலேய அரசு. காந்தி உப்புச் சத்தியாகிரகத்தை ஆரம்பித்தார். குஜராத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்கு 23 நாள்கள் நடைப்பயணம் மேற்கொண்டு, தடையை மீறி உப்பு எடுத்தார். இந்த யாத்திரையில் ஏராளமான மக்கள் இணைந்தனர். தமிழ்நாட்டில் வேதாரண்யத்திலும் ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது.
18. பொதுவுடமைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட பகத்சிங், புரட்சி இயக்கங்களுடன் சேர்ந்து ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்தார். லாலா லஜபதி ராயின் இறப்புக்குக் காரணமாக இருந்த காவல் அதிகாரியைச் சுட்டுக் கொன்ற குற்றத்துக்காக, ஆங்கிலேய அரசு பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோரைத் தூக்கிலிட்டது. இது நாடு முழுவதும் போராட்டங்கள் வலுவடைய காரணமானது. போர்த்துகீசியர் களிடமிருந்து விடுதலை பெற்ற கோவா, 1961ஆம் ஆண்டு இந்தியாவுடன் இணைந்தது.
19. 1937ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் தேர்தல் நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சி ஐந்து பிரதேசங்களில் பெரும்பான்மை பெற்றது. இரண்டு இடங்களில் தலைமையைப் பிடித்தது. கடைசியாக இந்தியாவுடன் இணைந்தது ஹைதராபாத்.
20. இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது. இந்தியத் தலைவர்களிடமோ மக்களிடமோ கருத்து கேட்காமல், இந்தியா போரில் பங்கேற்கும் என்று ஆங்கிலேய அரசு அறிவித்தது. இது பெரும்பான்மையினருக்கு அதிருப்தியைத் தந்தது. சிலர் ஆதரித்தார்கள், பலர் எதிர்த்தார்கள். இந்தியர்கள் சுதந்திரத்துக்காகத் தங்களுக்குள் சண்டையிட்டு மடிய வேண்டும் என்பது

ஆங்கிலேயர்களின் விருப்பமாக இருந்தது. நூறாண்டுகளுக்கு மேல் போராடியும் கிடைக்காத சுதந்திரத்தை, எப்படியாவது அடைந்தே தீர வேண்டும் என்கிற எண்ணம் உருவானது.

21. வெளிநாடுகளில் போர்க் கைதிகளாக இருந்த இந்தியர்களை ஒன்று திரட்டி, ‘இந்திய தேசிய ராணுவம்’ என்கிற அமைப்பை உருவாக்கினார் சுபாஷ் சந்திர போஸ். இதன் மூலம் ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்ட முடியும் என்று நம்பினார்.

22. இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் படைக்கு ‘கேப்டன் லட்சுமி’ தலைமை ஏற்றார்.

23. 1942ஆம் ஆண்டு ‘செய் அல்லது செத்து மடி’ என்கிற முழக்கம் இந்தியா முழுவதும் பரவியது. அதுவே ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கமாக உருவெடுத்தது.

24. பல தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். நாடு முழுவதும் போராட்டம் உச்சத்தை அடைந்தது.

முதல் சுதந்திர தினத்தன்று தேசிய கீதம் இல்லாததால் பாடப்படவில்லை.

1911ஆம் ஆண்டே ‘ஜன கண மன’ பாடல் எழுதப்பட்டாலும் 1950ஆம் ஆண்டுதான் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

25. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பிரிட்டனில் வின்ஸ்டன் சர்ச்சில் ஆட்சியை இழந்தார். 1945ஆம் ஆண்டு தொழிலாளர் கட்சியின் தலைவராக இருந்த கிளமென்ட் அட்லீ பிரதமரானார். இந்தியாவில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு, சுதந்திரம் குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன.

26. ஒருமுறை மட்டுமே பிரதமராகப் பதவி வகித்த கிளமெண்ட் அட்லீ இந்தியா, பாகிஸ்தான், மியான்மர், இலங்கை ஆகிய காலனி நாடுகளை பிரிட்டன் அரசிடமிருந்து விடுவித்தார்.

27. 1947ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று மதச்சார்பற்ற இந்தியா, முஸ்லிம் பாகிஸ்தான் என்று இரண்டாகப் பிரித்தார் ஆங்கிலேய இந்திய கவர்னர் ஜெனரல் மவுன்ட் பேட்டன்.

28. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் பெற்றது. முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவி ஏற்றார்.

29. ஏராளமான தலைவர்களாலும் இயக்கங்களாலும் வழிநடத்தப்பட்ட சுதந்திரப் போராட்டத்தில், பல லட்சக்கணக்கான மக்களும் பங்கேற்று, உயிர்களை இழந்து, நீண்ட காலம் போராடிப் பெற்ற சுதந்திரத்தைக் காப்போம்!



# சுதந்திர இந்தியா - 75 ஆண்டுகள்: சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் டு அணு ஆயுத வளர்ச்சி - 15 சாதனைகள்!




இன்று (ஆகஸ்ட் 15) இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்தத் தருணத்தில் ராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவற்றில் இந்தியா கடந்து வந்த மைல்கற்கள் குறித்தும், வல்லரசு நாடுகளுக்கு இணையாக நிகழ்த்திய பல்வேறு சாதனைகள் குறித்தும் இங்கே காண்போம்.

1. குளோபல் ஃபயர் பவர் என்ற ராணுவ ஆய்வு அமைப்பு, உலகின் 140 நாடுகளுடைய ராணுவ வலிமையை ஆய்வு செய்து தரவரிசை வெளியிடுகிறது. இதன் கணிப்பின்படி அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு அடுத்து உலகின் நான்காவது சக்திவாய்ந்த ராணுவ தேசம் இந்தியா.

2. இந்தியா 1974-ம் ஆண்டிலேயே அணுகுண்டு சோதனை செய்து, உலகின் ஐந்து அணு ஆயுத நாடுகளின் பட்டியலில் இணைந்துவிட்டது.

3. அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைச் சொந்தமாக உருவாக்கும் திறன்படைத்த மிகச்சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 2009-ம் ஆண்டு இந்தியா உருவாக்கிய ஐ.என்.எஸ் அரிஹந்த் அப்படிப்பட்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து 3,500 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும்



ஏவுகணைகள் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டன. அணுசக்தி ஏவுகணைகளையும் ஏவித் தாக்கும் திறன் படைத்த கப்பல்கள் இவை.

4. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டனுடன், விமானம் தாங்கிப் போர்க்கப்பல்களை சொந்தமாக உருவாக்கும் திறன் படைத்த நாடுகள் பட்டியலில் இணைந்துள்ளது இந்தியா. ஐ.என்.எஸ் விக்ராந்த் கப்பல் இந்தத் திறன் கொண்டது.

5. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளைப் போலவே, ஏவுகணை வல்லமை பெற்ற ஆறாவது நாடாக ஆகியுள்ளது இந்தியா. நாம் உருவாக்கிய பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணை, மணிக்கு 4,900 கி.மீ வேகத்தில் பயணம் செய்து தாக்கும் வல்லமை பெற்றது. கிட்டத்தட்ட ஒலியின் வேகத்தைப் போல 2.8 மடங்கு வேகம். சீனாவிடம் கூட இவ்வளவு சக்தி வாய்ந்த ஏவுகணை இல்லை.

6. குறைந்த எடையுள்ள போர் விமானங்களைச் சொந்தமாக உருவாக்கும் திறனை இந்தியா பெற்றுவிட்டது. இந்த தேஜாஸ் விமானங்களை 2019-ம் ஆண்டு இந்திய விமானப்படையில் இணைக்க ஒப்புதல் தரப்பட்டது.

7. விண்ணில் சுற்றியபடி நம்மை உளவுபார்க்கும் அந்நிய செயற்கைக் கோள்களை ஏவுகணைகளால் தாக்கி அழிக்கும் (ASAT Missiles) வல்லமையை நாம் பெற்றுவிட்டோம். 'மிஷன் சக்தி' என்ற இந்தத் திட்டம் 2019-ம் ஆண்டில் வெற்றியடைந்தது.



8. அந்நிய சக்திகள் ஏவும் அதிபயங்கர ஏவுகணைகளை விண்ணிலேயே கண்டறிந்து தாக்கி அழிக்கும் ஏவுகணைத் தடுப்பு அமைப்பை (Anti ballistic missile) இந்தியா உருவாக்கியுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்த சாதனையைச் செய்தது இந்தியா.
9. நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும் வானத்திலிருந்தும் அணுசக்தி ஏவுகணைகளை ஏவும் திறன் படைத்த நாடுகளை 'Nuclear Triad Capability' உள்ள நாடுகள் என்பார்கள். அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக இந்தத் தகுதியைக் கொண்ட ஆறாவது வல்லரசு தேசம், இந்தியா.
10. உலகிலேயே அதிகம் வெளிநாட்டு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா இருக்கிறது. இதை மாற்றுவதற்காக உள்ளூரில் ஆயுதத் தயாரிப்புகளை இந்தியா ஊக்குவித்துள்ளது. இதற்காக 309 வகையான ஆயுதங்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது.
11. ஆயுதங்களை இறக்குமதி செய்வது போலவே ஏற்றுமதியும் செய்கிறது இந்தியா. கடந்த நிதியாண்டில் சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்காசிய நாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி நடந்துள்ளது.
12. உத்தரப் பிரதேசத்திலும் தமிழகத்திலும் தலா 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் அளவுக்கு ஒவ்வொரு பாதுகாப்புத் துறை தொழில் மண்டலத்தை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் துறை கூட்டு முயற்சியில் ராணுவத் தளவாடங்கள் உருவாக்கப்பட உள்ளன.
13. கிழக்கு பாகிஸ்தானில் அரச வன்முறை நிகழ்ந்தபோது இந்தியா தலையிட்டு வங்க தேசம் என்ற நாடு உருவாகக் காரணமானது. இப்படி ஒரு நாட்டின் சுதந்திரத்துக்கு உதவிய பெருமை வெகுசில நாடுகளுக்கே கிடைத்திருக்கிறது. அந்தப் போரின்போது 80,000 பாகிஸ்தான் வீரர்கள் இந்திய ராணுவத்திடம் சரணடைந்தனர். உலகின் மிகப்பெரிய சரணடைதல் நிகழ்வு இது.

14. உலகின் மிக உயரமான எல்லைப் பிரதேசம் எனக் கருதப்படும் சியாச்சின் மலையை இந்திய ராணுவம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. கார்கில் பகுதியில் 1999-ம் ஆண்டு பாகிஸ்தான் ராணுவம் ஊடுருவியபோது நம் ராணுவம் தீரத்துடன் போரிட்டு வெற்றி அடைந்தது. உலகின் மிக உயர்ந்த போர்க்களத்தில் நிகழ்ந்த போர் இது.

15. மியான்மர் காடுகளில் பதுங்கியிருந்து இந்தியா மீது தாக்குதல் தொடுத்த போராளிக் குழுக்களை அங்கே சென்று தாக்கி அழித்தது இந்திய ராணுவம். இதேபோன்ற சர்ஜிகல் ஸ்ட்ரைக்கை பாகிஸ்தானுக்குள் சென்றும் நடத்தியிருக்கிறது நம் ராணுவம்.










TRINITY MIRROR

MONDAY 15-8-2022



About 375 students of Sri Ramakrishna College of Arts and Science as part of Har Ghar Tiranga campaign created a human formation to mark the 75 years of Indian Independence (Azadi Ka Amrit Mahotsav) at the college premises.

6 மக்கள்




# பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தின கொண்டாட்டம்

**ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

கோவை நவஇந்தியாவில் உள்ள ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சுதந்திரதின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் செயலர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார்.

கோவை தேசிய மாணவர் படை தலைமையிடப் பயிற்சி அலுவலர் லெப்டினன்ட் கர்னல் தினேஷ்குமார் பத்தக், விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தேசியக்கொடியேற்றி வைத்தார். விழாவின் சிறப்பு நிகழ்வாக நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்களின் அணிவகுப்பைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் சிறந்து விளங்கிய தேசிய மாணவர்படை, நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

முன்னதாக பாப்பநாயக்கன் பாளையம் மணிமேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள காந்திமண்டபத்தில் இருந்து, நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் எஸ்.பிரகதீஸ்வரன் தலைமையில், நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர்படை மாணவ, மாணவிகள், தேசியக்கொடியை ஏந்தியவாறு, கல்லூரி வளாகம் வரை ஊர்வலமாக வந்தனர். அப்போது பொதுமக்களுக்கு சுதந்திரதின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். சுதந்திர தின விழாவில் கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

தி கோவை மெயில்
தமிழ் & ஆங்கில வாரஇதழ்
Postal Reg No: CB 123/21-23
www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Date : 15 AUG 2022

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் சுதந்திர தின கொண்டாட்டம்

தி கோவை மெயில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சுதந்திர தினவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார் தலைமை வகித்தார். கோயம்புத்தூர் தேசிய மாணவர் படை தலைமையிடப் பயிற்சி அலுவலர் லெப்டினன்ட் கர்னல் தினேஷ்குமார் பத்தக், விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேசியக் கொடியேற்றி வைத்தார்.




என்.எஸ்.எஸ் பாரேட் அணியை தேசிய மாணவர் படை தலைமையிடப் பயிற்சி அலுவலர் லெப்டினன்ட் கர்னல் தினேஷ்குமார் பத்தக் துவக்கி வைக்கிறார். உடன், (வலமிருந்து) கல்லூரி முதல்வர் சிவக்குமார், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பிரகதீஸ்வரன், என்.சி.சி அதிகாரி விவேக்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் அணிவகுப்பைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் சிறந்து விளங்கிய தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். முன்னதாக பாப்பநாயக்கன்பாளையம் மணி மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள காந்தி மண்டபத்தில் இருந்து நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பிரகதீஸ்வரன் தலைமையில், நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள், தேசியக் கொடியை ஏந்தியவாறு கல்லூரி வளாகம் வரை ஊர்வலமாக வந்தனர்.

அப்போது பொதுமக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். சுதந்திர தினவிழாவில் கல்லூரி துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

COVID-19 IS NOT OVER. FOLLOW THE RULES !

தி கோவை ஹெரால்டு
தமிழ் & ஆங்கிலம் வார இதழ்
15.08.2022

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில்

# சுதந்திர தினவிழா கொண்டாட்டம் கோலாகலம்

தி கோவை ஹெரால்டு

கோவை நவ இந்தியாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சுதந்திர தினவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார்.

கோயம்புத்தூர் தேசிய மாணவர் படை தலைமையிடப் பயிற்சி அலுவலர் லெப்டினன்ட் கர்னல் தினேஷ்குமார் பத்தக், விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தேசியக் கொடியேற்றி வைத்தார். விழாவின் சிறப்புநிகழ்வாக




நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் அணிவகுப்பைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அதைத்தொடர்ந்துபல்வேறு போட்டிகளில் சிறந்து விளங்கியதேசியமாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

முன்னதாகபாப்பநாயக்கன் பாளையம்மணிமேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள காந்திமண்டபத்தில் இருந்து. நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் எஸ். பிரகதீஸ்வரன் தலைமையில்,நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள்,தேசியக்கொடியை ஏந்தியவாறு, கல்லூரி வளாகம்வரை ஊர்வலமாக வந்தனர். அப்போதுபொது மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். சுதந்திர தினவிழாவில் கல்லூரி துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாகக்கலந்துகொண்டனர்.

www.thekovaiherald.com | www.facebook.com/Thekovaiherald | thekovaiherald



# INFO Corner



Chess was invented in India.



Algebra, Trigonometry and Calculus are studies, which originated in India.



Besides the US and Japan, India is only other country in the world to have indigenously built a super computer.



India never invaded any country in her last 100000 years of history.



India has the largest number of Post Offices in the world.



The 2nd largest number of scientists and engineers in the world, are in India.

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

A Unit of M/s SNR Sons Charitable Trust

Co-Ed, Accredited by NAAC with A+ Grade, Ranked 84th in NIRF 2021 | An ISO 9001:2015 Certified Institution

## PROGRAMMES OFFERED

### COMMERCE - UG

B.Com, B.Com (CA), B.Com (PA), B.Com (BPS), B.Com (IB), B.Com (IT), B.Com (CS), B.Com (B&I), B.Com (RM), B.Com (CMA), B.Com (A&F)

### MANAGEMENT SCIENCE - UG

BBA, BBA (CA)

### COMPUTING - UG

BCA, B.Sc (CS), B.Sc (IT), B.Sc (CS&CS),
B.Sc Computer Science and Data Analytics
B.Sc Computer Science
(Artificial intelligence and Data Science)

### SCIENCE AND HUMANITIES - UG

B.Sc (Electronics and Communication Systems), B.Sc (Maths), B.Sc (Physics), B.Sc (Chemistry), B.Sc (Biotechnology), B.Sc (CS & HM), B.A (Eng. Lit.),

### POST GRADUATE PROGRAMMES

MBA (AICTE Approved), MSW, M.Com, M.Com (IB), M.Sc (CS), M.Sc (IT), M.Sc (Maths), M.Sc (Electronics and Communication Systems), M.Sc (Biotechnology), M.A (Eng.Lit.)

### INTERNATIONAL EXPOSURE

Do your Course/Semester abroad at
- Asia Pacific University, Malaysia
- Sunway University, Malaysia

### STATE-OF-THE-ART INFRASTRUCTURE

- Flood Lit - Cricket
- Flood Lit - Fives Football
- Badminton, Basketball

### INDUSTRY INTEGRATION

- Tata Consultancy Services
- IBM
- Google Certification
- TCS ION
- MAAC

**RANKED IN TOP 50 COLLEGES (ALL INDIA) BY LEADING MAGAZINES**

### SPECIAL FEATURES

★ 27 Clubs for societies
★ 89 Job/Skill oriented courses
★ MOE's Innovation Centre for Idea to Innovation
★ DBT Star College
★ Sports scholarship for National and State Level Players

Medical concession to students, staff, parents and alumni at Sri Ramakrishna Hospital

www.srcas.ac.in




7373085666 | 9942320001

# ADMISSIONS OPEN
## FOR THE YEAR 2022 - 2023

SRI RAMAKRISHNA
COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)
(FORMERLY SNR SONS COLLEGE)
Avinashi Road, Nava India, Coimbatore - 641 006.

Ranked 90th by NIRF 2022 | Accredited with 'A+' Grade by NAAC
AICTE & UGC Approved, ISO 9001:2015 Certified, Affiliated to Bharathiar University




**CONVENOR**

**Dr.D.Sampath Kumar**
Associate Professor - Information Technology

**COORDINATORS**

**Media**
**Dr.T.Sathiyaseelan**
Assistant Professor - Tamil

**Technical**
**Dr.P.Manikandaprabhu**
Assistant Professor - Computer Science